(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதா.

திரு. ரா. ராமச்சந்திர துரை : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதியளிக்கப்பட்டது.

திரு. ரா. ராமச்சந்திர துரை : இம் மசோதாவை பேரவையின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(ஈ) 1970-ம் ஆண்டு மேட்டூர் நகரியம் (ஒழிப்பு—நகராட்சி நீட்டுதல்) மசோதா.

திரு. எம். சுரேந்திரன் : 1970-ம் ஆண்டு மேட்டூர் நகரியம் (ஒழிப்பு—நகராட்சி நீட்டுதல்) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதியளிக்கப்பட்டது.

திரு. எம். சுரேந்திரன் : இம் மசோதாவை அறிமுகப்படுத்து கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(உ) 1970-ம் ஆண்டு கிறிஸ்த்துவ வாரிசுரிமை (ரத்து) மசோதா.

THIRU J. JAMES : Sir, I move that leave be granted to introduce the Christian Succession (Repeal) Bill, 1970.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதியளிக்கப்பட்டது.

THIRU J. JAMES : Sir, I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

7. தனியார் அலுவல்கள்—தொடர்ச்சி.

(2) தனித் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

மாநில தன்னாட்சி பெற, மத்திய அரசிடம் உள்ள அதிகாரங்களைப் பரவலாக்குதல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தின் மீதான விவாதம் தொடரும்.